III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.27/2021

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 08-03-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :Thempavani | Caste | : |
| Husband's Name | :Anbazhagan | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk: | |

**குறுக்கு விசாரணை**

தாவா சொத்தை எனது தகப்பனார் எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை எனது தகப்பனார் வாங்கும் போது வீட்டு மனையாக இருந்தது. அதன்பின்னர் அவர் அதில் வீடு கட்டினார். அந்த வீட்டை அவர் 1980களில் கட்டினார். எனது உடன் பிறந்தவர்கள் ஒரு அக்கா மற்றும் ஒரு அண்ணன். எனது அக்காவின் பெயர் பாரதி. அவர் மூன்றாம் பிரதிவாதி. எனது அண்ணனின் பெயர் எஸ்.மோகன்தாசன். அவர் முதலாம் பிரதிவாதி. எனது அப்பா தாவா செ சாத்தை சுயமாக சம்பாதித்து வாங்கினார் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் கோகிலா. எனது தகப்பனார் 16/03/1996ல் இறந்தார். எனது தாயார் 25/12/2007அன்று இறந்தார். எனக்கு 15/06/1994அன்று திருமணமானது. எனது அக்கா பாரதிக்கு எப்போது திருமணமானது என்பது எனக்கு தெரியாது. எனது தகப்பனார் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். எனது தாயார் வேலை எதுவும் பார்க்கவில்லை. எனது அப்பாவிற்கு தாவா சொத்து தவிற வேறு சொத்து அனகாபுத்துாரில் இருந்தது. அந்த சொத்து என்ன ஆனது என்பது எனக்கு தெரியாது. அந்த சொத்து குறித்து எனக்கும் பாரதிக்கும் எனது தாயார் செட்டில்மென்ட் எழுதி கொடுத்தார். அந்த விவரம் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படும் போது எனக்கு தெரியவந்தது. அந்த செட்டில்மென்ட் பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எனது திருமணத்தின் போது எனது தகப்பனார் எனக்கு 5 சவரன் நகை போட்டார். எனக்கு திருமணம் திருப்பதியில்

மண்டபத்தில் நடைபெற்றது. உயில் விவரம் எனக்கு 2021ல் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.3 உயிலின் சான்றிட்ட நகல் ஆவணத்தில் கடைசி பக்கத்தின் பின்புறத்தில் 26/07/ 2019 தேதியன்று அந்த ஆவணம் வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பின் கற்றறிந்த வழக்கிறஞரின் வேண்டுகோளுக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).